பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 08 செவ்வாய்க்கிழமை 25.10.2022 கதிர் 352

### இனி இது ரகசியம் அல்ல!

இந்திய வம்சாவளியில் தமிழகத் தொடர்புள்ள கமலா ஹரிஸ் இப்போது அமெரிக்க உப ஜனாதிபதி. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பெரும்பாலும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அவராக இருக்கலாம். எதிர்காலத்தில் அமெரிக்க ஜனாதிபதியாகும் ☞2


# ரணிலின் தீர்வு முயற்சியை கூட்டமைப்பு வரவேற்கும்!

## இன்று அறிவித்தல் வெளியாகும்

**யாழ்ப்பாணம் ஒக்டோபர் 25**

தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பு, அடுத்த ஒரு வருடத்திற்குள் முற்றுப் பெற வேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பை தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கும். அத்தகைய முயற்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவது பற்றிய கூட்டமைப்பின் அறிவிப்பு இன்று பகல் யாழ்ப்பாணத்திலிருந்து கூட்டமைப்பு தலைவர்களால் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ☞2

## ஓட்டோக்களுக்கு எரிபொருள் கோட்டா இரு மடங்காகின்றது



தொழில்முறை பயணிகள் போக்குவரத்து ஓட்டோக்களுக்கான வாராந்த எரிபொருள் ஒதுக்கீட்டை (கோட்டாவை) 05 லீற்றரில் இருந்து 10 லீற்றராக அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக மேல் மாகாணத்தில் ☞2

## வீட்டுத் தோட்டத்தில் கஞ்சாவை வளர்த்தவர் வசமாகச் சிக்கினார்!




வீடு ஒன்றின் தோட்டத்தில் சூட்சுமமான முறையில் 53 கஞ்சா செடிகளை வளர்த்துவந்தசந்தேக நபரை சவளக்கடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சவளக்கடை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அன்னமலை பகுதியில் கஞ்சா செடிகள் வளர்க்கப்பட்டு வருவதாக இரகசிய தகவல் ☞2

## தண்டவாளத்தில் சரிந்து வீழ்ந்த குப்பை மேட்டுடன் ரயில் மோதல்

### ஹட்டன் ரயில் நிலையம் அருகே சம்பவம்



மலையக ரயில் பாதையில் ஹட்டன் ரயில் நிலையத்தை அண்மித்த ரயில் பாதையில் நேற்றுக் காலை பாரிய குப்பை மேடு சரிந்து விழுந்ததாக ஹட்டன் ரயில் நிலையப் பொறுப்பதிகாரி ☞10

## டிராக்டர் தடம் புரண்டதில் இளம் குடும்பஸ்தர் மரணம்

### கொக்கட்டிச்சோலையில் சம்பவம்



கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மணல்பிட்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை டிராக்டர் தடம்புரண்டதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

40 ஆக் கிராமம், ☞10

### இந்திய வம்சாவளி இளைஞரான

## ரிஷி சுனக் போட்டியின்றி பிரிட்டிஷ் பிரதமராகிறார்!



பிரிட்டனில் கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராகவும், பிரதமராகவும் ரிஷி சுனக் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு 190க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் ஆதரவு அளித்துள்ளனர். இதன்மூலம் பிரிட்டன் வரலாற்றில் இந்திய ☞10

## யாழில் சூரிய கிரகணம் இன்று அவதானிக்கலாம்



இன்று நிகழவுள்ள சூரிய கிரகணத்தை யாழ்ப்பாணத்தில் மிகத் தெளிவாகக் காண முடியும் என கொழும்பு ☞2

## போதைப் பாவனையைக் கட்டுப்படுத்த வடக்கில் விசேட படையணி அமைப்பு

யாழ் மாவட்டத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த விசேட படைப் பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டு விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என யாழ் பாதுகாப்பு படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

யாழ் மாவட்டத்தில் ☞2

## போதைப் பொருள் பாவனை; தட்டிக் கேட்டவருக்கு வெட்டு

வேலணைப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மதுபான விற்பனை மற்றும் போதைப்பொருள் பாவனை தொடர்பில தட்டி கேட்ட வேலணைப் பிரதேச பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் மீது நேற்று முன்தினம் மாலை வாள் வெட்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. ☞2

# நம் இளம் சமுதாயத்தை வெறும் கோதாக்க அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்படுகின்றது

## போதைப் பொருள் பாவனை அதிகரிப்புத் தொடர்பில் சிறீதரன் குற்றச்சாட்டு



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஒக்.25

வடக்கு, கிழக்கிலுள்ள இளம் சமுதாயத்திடம் இனிவரும் காலங்களில் இனம், நிலம், சமூகம் பற்றிய சிந்தனைகளை இல்லாமல் செய்து அவர்களை வெறும் கோதுகளாக்குகின்ற செயலையே அரசாங்கம் திட்டமிட்டு செய்கிறது என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றஞ்சாட்டினார்.

தமிழர் தாயகத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனை தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

போதைவஸ்து தொடர்பாக பொலிஸ், இராணுவம், கடற்படை ஆகிய மூன்று தரப்பு களிடமுமே நாணயக்கயிறு காணப்படுகிறது. போதை வஸ்தை கொண்டுவர அனுமதிப்பவர்களாகவும், அதனைகொண்டு வருபவர்கள், விற்பவர்களை ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது ......................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ப்பு அவருக்கு உண்டு.

அவர் அமெரிக்க உப ஜனாதிபதியானால் ஈழத் தமிழருக்கு ஏதும் விடிவு கிட்டும் என்ற எதிர்பார்ப்பு - நப்பாசை - தமிழர்கள் மத்தியில் ஆரம்பத்தில் இருந்தது உண்மைதான். ஆனால் எதுவும் நடக்கவில்லை. நடக்கப் போவதும் இல்லை என்றுதான் இப்போது தோன்றுகின்றது.

இப்போது இந்திய வம்சாவளியை சேர்ந்த இளைஞர் ரிஷி சுனக் பிரிட்டிஷ் பிரதமராகின்றார். கன்னட வம்சாவளியை சேர்ந்த சுனக் பிரிட்டனின் பெரும் பணக்கார எம்.பிக்களில் ஒருவர்.

இந்தியப் பெரும் கோடீஸ்வரரான என்.நாராயணமூர்த்தியின் மகள் அக்ஷதா மூர்த்தியை 2009இல் கை பிடித்தார் ரிஷி சுனக்.

மாமனார் நாராயணமூர்த்தி பெரும் தொழில்நுட்பநிறுவனமான இன்ஃபோசிஸின் நிறுவுனர். இந்தியாவில் மிகப் பெரிய பணக்காரர்களில் முதல் பத்து இடங்களுக்குள் இருப்பவர் அவர்.

தமிழ் மொழியை விளங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல் உடையவரான ரிஷி சுனக், ஈழத் தமிழ் வம்சாவளியை சேர்ந்த பிரபல வர்த்தகரான - லைக்கா நிறுவனத்தின் - சுபாஸ்கரனின் நெருங்கிய நண்பரும் கூட என்று ஒரு தகவல் உள்ளது.

ஏற்கனவே பிரிட்டனின் நிதி அமைச்சராக இருந்து நல்ல பெயர் வாங்கிய ரிஷி சுனக், இப்போது பொருளாதார நெருக்கடியை ஒட்டிய அரசியல் சர்ச்சைகளில் சிக்கி கிடக்கும் பிரிட்டனை, விரைந்து நேர் சீராக்கி, வழமை நிலைக்குக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கை பல மட்டங்களிலும் உள்ளது.

அவரின் அரசியல் எழுச்சி ஈழத் தமிழர்களுக்கு ஏதேனும் பயன்தருமா? தெரியவில்லை..!

- மின்னல் -

## ரணிலின் தீர்வு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிய அரசமைப்பு உட்பட்ட விடயங்களை ஒரு வருடத்துக்குள் பூர்த்தி செய்ய வேண்டும் என்று குறுகிய கால அவகாசத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்திருக்கின்றமையால் -

பெரும்பாலும், ஏற்கனவே நல்லாட்சி அரசின் காலத்தில் அந்த நாடாளுமன்றத்தின் கூட்டிணைக்கத்தின் அடிப்படையில் அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் தயாரிக்கப்பட்ட உத்தேச நகல் யாப்புக்கான திட்ட வரைவை, இப்போதைய முயற்சியின் ஆரம்ப புள்ளியாக கொண்டு, அதிலிருந்து விடயங்களை விரைந்து நகர்த்த ஜனாதிபதி திட்டமிட்டிருக்கஜ் கூடும் எனக் கருதப்படுகின்றது.

அந்தத் தீர்வு முயற்சி தோற்றுப் போய் விடவில்லை, அதை முன்னெடுப்பதற்கு இன்னும் சாத்தியங்கள் இருக்கின்றன எனத்தான் கருதுகிறார் என்ற சாரப்பட அந்த முயற்சியில் கடைசி வரை மும்முரமாக உழைத்த தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அண்மைக் காலம் வரை கூறி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது

அந்த முயற்சியை, அது நிறுத்தப்பட்ட கட்டத்தில் இருந்து, முன்நகர்த்தி இறுதி இலக்கை எட்ட நடவடிக்கை எடுக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று கூறக் கூடும் என்ற எதிர்பார்ப்பு அரசியல் வட்டாரங்களில் நிலவி வருகிறது.

நோர்வே அனுசரணைப் பணியை முன்னெடுத்த எரிக் சொல்ஹெய்மின் கொழும்பு விஜயத்தை அடுத்து இவ்விடயங்கள் கட்டவிழத் தொடங்கியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

## யாழில் சூரிய கிரகணம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழகத்தின் வானியல் மற்றும் விண்வெளி அறிவியல் பிரிவின் பணிப்பாளர், பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இன்று மாலை 5.27 மணியளவில் சூரிய கிரகணத்தை பார்வையிட முடியும். இதனை சுமார் 22 செக்கன்கள் வெற்றுக் கண்களால் பார்வையிட முடியும் எனவும் கண்களுக்கு பாதிப்பு ஏற்படாது எனவும் பேராசிரியர் சந்தன ஜயரத்ன தெரிவித்தார்.

## ஓட்டோக்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழில்சார்ந்த ஓட்டோக்களை பதிவு செய்யும் பணிகள் நவம்பர் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிமனையின் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கும் தொழில்சார்ந்த ஓட்டோக்கள் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று நடந்த கலந்துரையாடலின் போதே இந்த விடயங்கள் வெளியிடப்பட்டன.

இதன்படி, எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி முதல் மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து பயணிகள் போக்குவரத்து ஓட்டோக்களுக்கும் வாரத்திற்கு 10 லீற்றர் எரிபொருள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய மாகாணங்களில் இயங்கும் பயணிகள் போக்குவரத்து ஓட்டோக்களை பதிவுசெய்யும் நடவடிக்கை நவம்பர் 6 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளது. அதன் பின்னர் அந்த ஓட்டோக்கான எரிபொருள் கோட்டாவை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது, இலங்கையில் 10 லட்சத்து 80,000 ஓட்டோக்கள் உள்ளன. அவற்றில் சுமார் 400,000 ஓட்டோக்கள் தொழில் முறை பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகின்றன என ஓட்டோக்கள் சங்கங்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 300,000 பயணிகள் போக்குவரத்து ஓட்டோக் கள் பொலிஸில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 13 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து பயணிகள் போக்குவரத்து ஓட்டோக்களையும் பதிவு செய்ய முடியாத பட்சத்தில் பொலிஸில் பதிவுசெய்து ஓட்டோக்களுக்கான எரிபொருள் கோட்டாவை வழங்க இந்தக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பில் மாகாண ஆளுநர்கள் மற்றும் மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபை அதிகாரிகளை துரிதமாக தெளிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, ஜனாதிபதி தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய மற்றும் அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## போதைப் பாவனை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்துள்ள போதைப் பாவனை தொடர்பில் பலாலி பாதுகாப்பு தலைமையகம் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது பெருந்தொகை கஞ்சா கைப்பற்றப்பட்டது. இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணப் பகுதிக்கு மிகப் பெரிய முறையில் போதைப் பொருள் கடத்தல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இளம்சந்ததியினரும் அவற்றிற்கு அடிமையாகின்ற தன்மையும் வெகுவாக அதிகரித்துள்ளது.

அந்த வகையில் இந்த துர்ப்பாக்கிய நிலையை இல்லாதொழிப்பதை நோக்கமாகக் கொண்டு யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேயசுந்தர தலைமையில் விசேட படைப்பிரிவானது உருவாக்கப்பட்டு விசேட சோதனை நடவடிக்கைகள் மற்றும் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் ஊடாக யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல்களை தடுத்தல், கைதுசெய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதனுடன் தொடர்புள்ள நபர்களை நீதி முன்நிறுத்துதல் போன்ற செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

51 ஆவது காலாட் படைப்பிரிவிற்கு கீழ்காணப்படுகின்ற ஜே150 கிராமசேவகர் பிரிவின் மாதகல் கிழக்கு பகுதியில் 513 ஆவது காலாட் படைப்பிரிவின் 16 ஆவது கெமுனு ஹேவா படையணியினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது 100 கிலோகிராம் கஞ்சாவுடன் அதனைக் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக விசேட அதிரடிப்படையினரிடம் கையளிக்கப்பட்டது.

மேலும் இதுபோன்ற கடத்தல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் முகமாக யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகத்துக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் பொதுமக்கள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் அவை தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்திற்கோ தொடர்பு கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விலாசம்: பாதுகாப்புப் படைத் தலைமையகம்(யாழ்ப்பாணம்), வசாவிளான்.

தொல்சிபேசி இலக்கம்: 076 - 6907751.

## போதைப் பொருள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலணை கிழக்கு முத்துமாரி அம்மன் கோவிலடிப் பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத மதுபான விற்பனை, போதைப் பொருள் விற்பனை மற்றும் மாட்டுத் திருட்டு என்பவற்றை தடுப்பதற்காக தீவக சிவில் சமூகத்துடன் சேர்ந்து முன்னாள் வேலணை பிரதேச சபை உறுப்பினர் சிவனேசன் செயற்பட்டுள்ளார்.

இந்நிலையில் அம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள வீட்டில் வைத்து நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இனந்தெரியாத நபர்களின் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## நம் இளம் சமுதாயத்தை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊக்குவிப்பவர்களாகவும் அவர்களே காணப்படுகின்றனர்.

போதைப் பொருள் வியாபாரிகளை பொலிஸார் கைது செய்வதில்லை. பெருந்தொகையான கஞ்சா இங்கு கடத்தப்படுகின்றது என்றால் அதனை தடுக்கின்ற வல்லமை கடற்படையிடம் உள்ளது. பொலிஸ், இராணுவம் இங்கு குவிக்கப்பட்டுள்ளன. இலங்கையிலுள்ள படைகளில் ஏறத்தாழ 70 சதவீதமானவர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலேயே குவிக்கப்பட்டிருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கிலுள்ள இளம் சமுதாயத்திடம் இனிவரும் காலங்களில் இனம், நிலம், சமூகம் பற்றிய சிந்தனைகளை இல்லாமல் செய்து அவர்களை வெறும் கோதுகளாக்குகின்ற செயலையே அரசாங்கம் திட்டமிட்டுச் செய்கிறது.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை கண்காணித்துப் போதைப்பொருள் பாவனை தொடர்பில் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். மதகுருமார்கள் மதஸ்தலங்கள் ஊடாக போதைப் பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்ள வேண்டும். வடக்கு, கிழக்கில் உள்ள பெற்றோர், மதகுருமார், அதிகாரிகள், அரசியல்வாதிகள் என அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படும்போதே போதைப்பொருள் பாவனையைத் தடுக்க முடியும் - என்றார்.

## வீட்டுத் தோட்டத்தில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றை அடுத்து பொலிஸார் நேற்றுத் தீபாவளி தினத்தன்று தேடுதல் மேற்கொண்டு சந்தேக நபரை கைது செய்தனர்.

அன்னமலை பகுதியை சேர்ந்த 58 வயதான சந்தேக நபரே கைதானார். வீட்டின் தோட்டத்தில் உள்ள பயிர்களுடன் இணைத்து இந்த 53 கஞ்சா செடிகளை இவர் வளர்த்து வந்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை சான்று பொருள்களுடன் நீதிமன்றத்தில் முன்னிறுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.




Search Facebook
V2 Travels and Tours

V2 TRAVELS இன் ஊடாக பதிந்து அமெரிக்கா சென்றவர்களின் விசா வென்ற வெற்றிக்கதைகளை எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் பார்வையிடலாம்.

இந்த அதிஸ்டத்தினை நீங்களும் பயன்படுத்துங்கள். மற்றவர்களுக்கும் பகிருங்கள். இதன்மூலம் நீங்களோ உங்கள் அன்புக்குரிய நண்பர்கள்,உறவினர்கள் என அனைவரும் உங்கள்மூலமாக இந்த அதிஸ்டத்தினை பெற இந்த தகவலினை பகிருங்கள்.

# அமெரிக்க லொத்தர் விசா

## நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

0768226244
0768226240

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | -0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மீண்டும் தொடங்கும் மிருக்கு

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற அத்தியாயத்தை மீண்டும் ஆரம்பத்தில் இருந்து தொடங்க முற்பட்டிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பை அடுத்த ஒரு வருடத்துக்குள் முற்றுப் பெறவைப்பது தனது நோக்கம் என்ற அவரது நேற்றைய அறிவிப்பு அதனைத்தான் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்த அறிவிப்பில் இரண்டு விடயங்கள் பொதிந்துள்ளன. ஒன்று – அறிவிப்புக்கான காலச் சூழல்; அடுத்தது – இந்த அறிவிப்பு மூலம் ஜனாதிபதி ரணில் விடும் செய்திக்குள் உள்ளார்ந்தமாகப் புதைந்து கிடக்கும் விடயங்கள்.

எந்த ஓர் ஆட்சி பீடமும் வலிமையாக நாடாளுமன்றத்தில் காலூன்றி நிற்கும் போது இனப் பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கிய – 'சென்சிட்டிவ்' ஆன – அரசமைப்பு ஏற்பாடுகளுக்கோ, நியாயமான விட்டுக் கொடுப்புகளுக்கோ இணங்கி வராது என்பதுதான் நமது நாட்டின் பட்டறிவு. கடந்த காலங்களில் வலிமையான நாடாளுமன்றப் பலத்துடன் அரசுகள் அதிகாரத்தில் இருந்தபோது தீர்வு பற்றி அப்படியும் இப்படியும் பேசிக் கொண்டனவே தவிர, தீர்வை எட்டும் விதத்தில் ஆக்கபூர்வமாக அவ்விடயத்தில் முன்நகரவே இல்லை என்பதுதான் நமது அனுபவம்.

ஜனாதிபதியின் நிறைவேற்றதிகாரத்தை வெட்டிக் குறைப்பதில் உச்சமாக அமைந்தது 19ஆவது திருத்தம். ஆக 48 எம்.பிக்களுடன் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக சிறுபான்மை அரசு அமைத்து இருந்த போது தான் – இப்போதையது போன்ற நிலைமை நிலவிய 2015 இல் தான் – அது சாத்தியமாயிற்று.

நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளுவதற்கு தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதும் முக்கியமான உள்ளடக்கமாகும். அந்தச் சூழ்நிலையில் தீர்வுக்கான முன்நகர்வுக்கு தெற்கில் எதிர்ப்புப் பெரிதாகக் கட்டவிழாது என்பது திண்ணம்.

அதுவும் சிறுபான்மை இனங்களுக்கு நீதியான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்ற வலியுறுத்தல் சிந்தனை, 'அறகலய' போராட்டக்காரர்களால் தெற்கில் பரவலாக விதைக்கப்பட்டிருக்கும் இச்சூழல் அந்த முயற்சிக்கு மிகப் பொருத்தமானதுதான்.

அடுத்து இந்த அறிவிப்பு மூலம் ஜனாதிபதி கொடுக்கும் உள்ளார்ந்த செய்தி. அதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

ஒன்று – 2024 ஜனவரிக்குப் பின்னர் அடுத்த ஜனாதிபதி தேர்தலை எதிர்கொள்ள விரும்பும் ரணில் விக்கிரமசிங்க அதற்கு முன்னரே – 2023 இலேயே – தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணல் என்ற அரசியல் சூதாட்டம் ஒன்றில் துணிச்சலுடன் இறங்கி, அதன் பெறுபேற்றுடன் அந்தத் தேர்தலை முகம் கொடுக்க விழைகின்றார் என்பது.

அடுத்தது – இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கத்தை அடுத்த ஒரு வருடத்துக்குள் நிறைவு செய்யத் தாம் எண்ணுகின்றார் என்ற அறிவிப்பின் மூலம், இந்த நாடாளுமன்றத்தை அந்த முயற்சியை ஒப்பேற்றும் வரை கலைக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்ற செய்தியை வலு தெளிவாக அவர் கோடி காட்டுகின்றார் என்பது.

ஏற்கனவே பிரதமராக இருந்து இரண்டு தடவைகள் இத்தகைய முயற்சியை முன்னெடுத்த அனுபவம் அவருக்கு உண்டு. ஒரு தடவை தமிழர் தரப்பில் புலிகளும், மறுதடவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அவருடன் இந்த முயற்சியில் சேர்ந்து இயங்கியிருந்தன.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்புக்கு சாதகமான – நம்பிக்கையை வெளிப்படுத்துகின்ற – பிரதிபலிப்பு தமிழர் தரப்பிலிருந்து வரும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

# காணாமல் போன பிள்ளைகளுக்கு தீர்வுகிடைக்காமல் தீபாவளியில்லை

### உறவுகள் வேதனை



காணாமல் போன பிள்ளைகளுக்கு தீர்வு கிடைக்காமல் தமக்கு தீபாவளி இல்லை என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

தமது உறவுகளுக்கு நீதிகோரி வவுனியாவில் பிரதான தபாலகத்துக்கு அருகில் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கும்போதே வடக்கு கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் இவ்வாறு குறிப்பிட்டார்.

# புலோலி தோட்டக் கிணற்றில் 2 இளைஞர்களின் சடலங்கள்





பருத்தித்துறை, புலோலி சிங்கநகர் பகுதியில் தோட்டக் கிணறு ஒன்றிலிருந்து இரண்டு இளைஞர்களின் சடலங்கள் தீபாவளி தினமான நேற்று இரவு மீட்கப்பட்டிருக்கின்றன.

பருத்தித்துறை, பன்னங்கட்டு பகுதியைச் சேர்ந்த சுசேந்தகுமார் சசிகாந்த் (வயது 24), மந்திகை உபய கதிர்காமம் பகுதியைச் சேர்ந்த கணேசலிங்கம் லம்போசிகன் (வயது 24) ஆகிய இருவருமே சடலங்கலாக மீட்கப்பட்டுள்ளனர்.

புலன் விசாரணை மற்றும் உடற்கூற்று விசாரணைகளின் பின்னரே மரணத்திற்கான காரணங்கள் குறித்து ஏதும் கூற முடியும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தனர்.

# உலக சந்தைகளில் நிலவுகின்ற விலை ஏற்ற இறக்கங்களுக்கேற்ப காஸ் விலை குறையலாம்

### லிற்றோ நிறுவனம் அறிவிப்பு

உலக சந்தையில் நிலவும் விலை ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப, உள்நாட்டு எரிவாயு விலை அடுத்த மாதம் மேலும் குறையலாம் என லிற்றோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக வங்கியிடமிருந்து லிற்றோ நிறுவனம் பெற்ற கடனை டிசெம்பர் மாதம் செலுத்த முடியும் என அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

மேலும் மீதமுள்ள கடனை டிசெம்பர் மாதத்துக்குள் செலுத்த எதிர்ப்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் உணவுப் பொருள்களை பராமரிக்க முடியாமல் சேமிப்பகம்!

உணவுத் திணைக்களத்தின் சேமிப்பக வளாகத்தை நவீனப்படுத்துவதற்கு 29 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவளிக்கப்பட்டது.

இருந்த போதிலும் ஒரு லட்சம் மெற்றிக் தொன் அளவிலான உணவுப் பொருள்களைப் பராமரிக்க முடியாமல் போனமை தொடர்பாகக் கோபா குழு கவனம் செலுத்தியது.

ஒரு லட்சம் மெற்றிக் தொன் அரிசி இருப்பு வைத்து பராமரிக்க ஆண்டுக்கு 2 ஆயிரத்து 200 கோடி ரூபா தேவைப்படுவது தெரியவந்தது.

உணவுத் துறையின் வேயங்கோட்டை சேமிப்பகத்தின் எண் 1, 7, 8, 9, 10, 13 ஆகிய ஆறு கிடங்குகள் 29 கோடி ரூபா செலவில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன என கூறப்படுகிறது.

கபீர் ஹாசிம் தலைமையில் கடந்த 20ஆம் திகதி அரசாங்கக் கணக்குகள் தொடர்பான நாடாளுமன்றக் குழு கூடிய போது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

# தீபாவளி தினத்தை முன்னிட்டு நல்லூரில் சிறப்பு வழிபாடுகள்

தீபாவளி தினத்தை முன்னிட்டு நேற்று (திங்கட்கிழமை) நல்லூர் கந்தசுவாமி கோவிலில் சிறப்பு விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சிக்கல்நிலை நீங்கி நாடு சுபீட்சமடையவும் விசேட பூஜைகள் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நாட்டில் ராஜபக்ஷக்களின் ஆதிக்கத்தை மக்கள் பலத்தினால் இல்லாமலாக்குவோம்!

தற்போதைய நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு இந்த ஆட்சி முறைமையில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டுமென்றே மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதற்கு மாறாக சுய விருப்பின் படி தனிப்பட்டவர்களுக்கு சிறப்பு சலுகைகள் வழங்குவதல்ல. புதிய முறையின் கீழ் பொருளாதார சமூக, நீதி மற்றும் மனித நேயத்தை முதன்மைப்படுத்தும் வேலைத்திட்டமே நாட்டில் தேவைப்படுகிறது.

இந்நிலையில் மக்கள் விரும்பும் ஆட்சி முறைமையை உருவாக்கி ராஜபக்ஷ ஆதிக்கத்தை மக்கள் பலத்தால் இல்லாமலாக்குவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மத்திய கொழும்பு தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

இந்நாட்டின் அரசியல்வாதிகளின் புதல்வர்கள் தத்தமது அரசியல் பிரவேசங்களுக்காக எப்பொதும் தங்கள் பெற்றோரின் தேர்தல் தொகுதிகளையே பொறுப்பேற்றனர்.

இந்த வகையில் கொழும்பு மத்திய தேர்தல் தொகுதி தனித்துவம் வாய்ந்ததாக இருந்த போதிலும் தனது அரசியல் பயணத்தின் வறிய பிரதேசத்துக்குச் சென்று அந்த பிரதேச மக்களைப் பற்றி அறிந்து கொண்டு தனிப்பட்ட முயற்சியாகவே அரசியல் பயணத்தை ஆரம்பித்தேன். இதன் காரணமாக நாட்டு மக்களுக்கு என்னைப் பற்றி நிருப்பிக்க வேண்டியதொரு தேவையில்லை.

இன, மத, சாதி பிரிவினைகளை ராஜபக்ஷவினர் உருவாக்கி நாட்டைத் துண்டு துண்டாகப் பிளவுபடுத்தி இன, மதங்களுக்கு இடையில் வெறுப்புணர்வை ஏற்படுத்தியதன் விளைவுதான் தற்போது நாடு எதிர்நோக்கியிருக்கும் அவலமான தலை விதிக்குக் காரணமாகும்.

ராஜபக்ஷ குடும்பம் எதேச்சதிகாரமும், பிடிவாதமும் பொதிந்திருப்பதாகவும் அதன் காரணமாக 2 கோடியே 20 லட்சம் மக்களும் மிகவும் ஆதரவற்றவர்களாக மாறியுள்ளனர்.

கருத்தடை நடவடிக்கைகள் ஆரம்பித்து தகனம், அடக்கம் வரை இந்த இன, மத பாகுபாடு மேற்கொள்ளப்பட்டது. மேலும் பல்வேறு தரப்பினரும் இனவாதம், மதவாதம் என்று கூக்குரலிடுகின்ற போதிலும் அன்று ஐக்கிய மக்கள் சக்தி தவிர்ந்த ஏனையவர்கள் அதனை எதிர்க்கவில்லை.

22 ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் ஏழு மூளைக்காரரின் பல் ஒன்று பறிபோயுள்ளது. அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் முடிந்தால் கொழும்பில்




போட்டியிட்டுக் காட்டுமாறும் மேலும் படிப்படியாக ராஜபக்ஷ ஆதிக்கத்தை மக்கள் பலத்தால் இல்லாமலாக்குவோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு கூறுகிறேன்.

இதேவேளை ரணசிங்க பிரேமதாஸவிற்கு பின் மத்திய கொழும்பைத் திறம்பட வழி நடத்தும் மத்திய கொழும்பின் குட்டி பிரேமதாஸ முஜிபுர் ரஹ்மான் என புதிய பட்டம் சூட்டிய எதிர்க்கட்சித் தலைவர் எதிர்காலத்தில் அமையப்பெறும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவி வழங்கப்படும் எனவும் வாக்குறுதியளித்தார்.




# தனது காலத்தைப் போல் நட்புறவு கொண்ட வெளியுறவுக் கொள்கை தற்போது இல்லை!

நாட்டில் நட்புறவான வெளியுறவுக் கொள்கை இல்லாததுதான் தற்போது நெருக்கடி நிலையை மேலும் மோசமாக்கியுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச அளவில், தான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில், எந்த பாகுபாடும் இன்றி உலக நாடுகள் அனைத்தும் உதவின என மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஐரோப்பா, அமெரிக்கா, சீனா, இந்தியா, ரஷ்யா மற்றும் உலக நாடுகள் அனைத்து நாடுகளும் உதவிகளை வழங்கின என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கு வெளியுறவுக் கொள்கையே காரணம் என சுட்டிக்காட்டிய முன்னாள் ஜனாதிபதி, கடந்த 3 ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் வெளியுறவுக் கொள்கை தொடர்பாக அதிருப்தி வெளியிட்டார்.

இதேவேளை, கடந்த மூன்று வருடங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மக்கள் மத்தியிலும் அரசாங்கத்திலும் பாரிய கேள்விக்குரிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



# 22 ஆம் திருத்தம் நிறைவேற்றத்துக்கு மக்களின் போராட்டங்களே காரணம்!

## ஹர்ஷ டி சில்வா பகிரங்க அறிவிப்பு



மக்கள் தன்னெழுச்சி போராட்டத்தின் பலனாகவே 22 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதாகவும், அந்தப் போராட்டத்தில் பங்கேற்ற லட்சக்கணக்கான மக்களே அந்த அடைவுக்கு சொந்தக்காரர்கள் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

இந்த மக்கள் போராட்டம் தொடர்ந்து, புதிய அரசமைப்பு உருவாக வழிகோலும் எனவும் அந்த கட்சி நம்பிக்கை வெளியிட்டது.

கொழும்பு - எதிர்க்கட்சி அலுவலகத்தில் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நடத்திய விடே ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டது.

ஊடகவியலாளர் ஒருவர் 22 ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் சொந்தக் காரர்கள் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கருத்து வெளியிடுகையில் -

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற, நாட்டில் தன்னெழுச்சி போராட்டத்தை முன்னெடுத்த லட்சக் கணக்கான மக்களே காரணம். இதன் முழு கௌரவமும் அவர்களையே சேரும். அதனைவிடுத்து இதற்கு யாரும் இதில் உரிமை கொண்டாட முடியாது.

இந்த அரசமைப்பு திருத்தச் சட்டம் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்களில் குறிப்பிடத்தக்க அளவு நாடாளுமன்றுக்கு வழங்கப்பட்டுள்ளன என சிலர் கூறுகின்றனர்.

அதில் எந்த உண்மையும் இல்லை. ஜனாதிபதியின் அதிகாரம் இந்த 22 ஆவது திருத்தம் ஊடாக துளியளவும் குறைக்கப்படவில்லை.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம், அவர் இதற்கு முன்னர் செய்த அனைத்தையும் செய்துகொண்டு செல்லலாம்.

உதாரணமாக 17 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக, அமைச்சரவையை நியமிக்கும் போது பிரதமரின் ஆலோசனையை ஜனாதிபதி பெற வேண்டும் எனக் கூறப்பட்டது.

ஆனால் தற்போது பிரதமருடன் எந்த கலந்தாலோசனையையும் அமைச்சரவையை நியமிக்கவோ, அதன் விடயப் பரப்பை தீர்மானிக்கவோ, அல்லது அமைச்சர்களை மாற்றவோ ஜனாதிபதி செய்யவேண்டியதில்லை.

20 ஆவது திருத்தத்தை விட 22 ஆவது திருத்தம் சிறந்தது என்ற ஒரே காரணத்துக்காகவே நாம் அதற்கு ஆதரவாக வாக்களித்தோம்.

சுயாதீனக் குழுக்கள், அரசமைப்பு பேரவை ஆகிய இரு சாதகமான விடயங்களே அதற்கான முக்கிய காரணங்களாகும். அரசமைப்பு சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பிரதிநிதியை தக்க வைத்துக் கொள்ள நாம் கடுமையாகப் போராடவேண்டிய நிலை இருந்தது.

22 ஆவது திருத்தச் சட்டம் , 19 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார சமர்ப்பித்த தனி நபர் பிரேரணையான 21 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நெருங்கவும் முடியாது.

மக்களின் தன்னெழுச்சி போராட்டமே 22 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டுவர வழிகோலியது. அது போராட்டத்தின் வெற்றிகளில் ஒன்று. இந்த மக்கள் போராட்டம் தொடர்ந்து புதிய அரசமைப்பை கொண்டு வரும். - என ஹர்ஷ டி சில்வா எம்.பி. குறிப்பிட்டார்.

## நாட்டில் டெங்கு பரவும் அபாயம்!



நாட்டின் 09 மாவட்டங்களில் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, மாத்தறை, புத்தளம், பதுளை, இரத்தினபுரி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களிலேயே டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நிலவும் மழையுடனான வானிலை காரணமாக டெங்கு காய்ச்சல் வேகமாக பரவக்கூடும் என்பதால், நுளம்புகள் பெருகும் வகையில் சூழலை வைத்திருக்க வேண்டாம் என மக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## நோர்வே கொடியில் பிரபாகரன் பொம்மை

அங்கம் - 160

தொடர்ந்த மனிதாபிமானத்துக்கு எதிரான நடவடிக்கைகளால் இந்த நாள்களில் பாதுகாப்பதற்கான முன்னுரிமை (Right to Protect R2P) என்ற சர்வதேச கோட்பாடு பற்றி சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் குரல் எழுப்ப, அது தங்களது இறைமையை மீறுவதாகவும், நடப்பது பயங்கரவாதத்திற்கு எதிரான உள்நாட்டு நடவடிக்கை, இது உள்நாட்டிலேயே தீர்க்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்து, அதற்கான ஆதரவு இந்தியாவிடம் இருந்தும் சீனாவிடம் இருந்தும் மஹிந்தவினால் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

இந்தியா அப்படியான R2P நடவடிக்கைகளுக்கு முன் வராது என்பதையும், சீனாவும் அதனை வன்மையாக எதிர்ப்பதையும் கணக்கெடுத்த சர்வதேசம் அதற்கு 'சார்க்' நாடுகளிலும் ஆதரவில்லை என்பதால் அதனை முன்னெடுக்கவில்லை.

இந்தியா வெளிப்படையாக எதுவும் தெரிவிக்காவிட்டாலும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரை இந்தியா ஆதரிக்கிறது என்பதையும், அதற்கான பீரங்கிப் பட்டாள உதவிகள் கொடுக்கப்படாவிட்டாலும் தங்களுக்கு இருந்த உளவுகள், புலனாய்வுகள் பற்றிய தகவல்கள் பரிமாறப்பட்டு, போர் ஊக்குவிக்கப்படுகின்றது என்பது உணரப்பட்டது. அதே போல அமெரிக்காவும் விடுதலைப் புலிகளின் கடல் சார் போக்குவரத்துகளை முறியடிப்பதற்கான உளவுத் தகவல்களை பரிமாற, விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றி வந்த பல கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.



தமிழ்ச்செல்வனுக்கு பிரபா இறுதி அஞ்சலி

இவற்றால் நோர்வே அனுசரணையாளர்கள் அவர்களது வெளியுறவு அதிகாரிகளின் அது கலந்துரையாடல்களில் ஒன்றில் போர் இல்லாத சமாதானத்தை நோக்கிப் போக வேண்டும், அதற்காக சமாதான பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டும், அன்றில் முற்றுமுழுதான முடிவுக்கான போராக இருக்க வேண்டும் எனக் கணிக்கிறார்கள்.

### தொடர்ந்த சமாதானத்துக்கான கணக்கெடுப்புகள்

ஆனால் இந்தியாவும் அமெரிக்காவும் போரை நிறுத்த இணங்காத வரை அது சாத்தியமாகாது என்ற நிலைப்பாடே இருந்தது.

அவர்கள் மே 2007 நோவே வெளிவிவகார அமைச்சர் ஜோனாஸ் கார் ஸ்ரோருக்குத் தெரிவித்த தங்களது தகவல்களில், தாங்கள் இந்த இனப் பிரச்சினைக்கு இராணுவ ரீதியாகத் தீர்வு காணலாம் என நம்பவில்லை என்றும், ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வென்று விடலாம் என தாங்கள் அபிப்பிராயப்படவில்லை என்றும், சர்வதேச நாடுகளின் போக்கும் அவர்கள் இரண்டு பகுதியினரின் மேல் வைக்கும் அழுத்தங்களும் அவர்கள் தங்கள் நிலைகளிலேயே இருப்பதற்கு உதவிகள் தருகின்றனவே ஒழிய, அவர்களது நிலையைப் பலவீனப்படுத்தவில்லை என்றும், விடுதலைப் புலிகள் பல தடவைகள் பின்னடைவுகளைச் சந்தித்து, பின்னர் தங்களது சாதுரியமான திட்டங்களாலும் தீரத்தாலும் முன்னேறி வந்தவர்கள், இப்பொழுது தாங்கள் கட்டிக் காக்கும் பிரதேசங்களை விட்டு, கொரில்லாத் தாக்குதல் முறைகளுக்கு அவர்கள் திரும்பலாம், ஆதலால் அவர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் முனைப்பாக இருப்பார்கள் என்றும் கூறப்பட்டது. எனவே, இந்தியாவின் மூலமும், அமெரிக்காவின் மூலமும் போர் நிறுத்த ஏற்பாடுகளுக்கு மேலும் முயற்சிகள் தேவை என்ற அபிப்பிராயங்கள் அனுசரணையாளர்களால் வலியுறுத்தப்பட்டன.



ஜோனாஸ் கார் ஸ்ரோர்

ஆனால் சிங்கள பேரினவாதிகளில் எவரும் அவர்களின் அரசியல் தரப்பு எதுவும் தொடரும் போருக்கு எதிராகவும் மனிதாபிமானத்துக்கு மாறான செயற்பாடுகள் குறித்தும் எதிர்ப்புகள் தராது பேரினவாதப் போக்குடைய சுதந்திரக் கட்சியின் பின்னால் அணி திரண்டு, அதற்கு பெருவாரியான ஆதரவு தந்து போரை நடத்தி வெற்றிக்கே கூப்பாடு போடுவார்கள் என அனுசரணையாளர்கள் கருதவில்லை

### முடிவுக்கான போர்

இதனால் இந்தியாவினதும் அமெரிக்காவினதும் நுண்ணறிவு (intelligence) உதவிகளோடும் பேரினவாதத்தின் உறுதிப்பாட்டாலும் போர் தொடரப்பட்டது. அதற்கு எதிராக விடுதலைப் புலிகள் கொழும்புப் பகுதிகளில் சில தற்கொலை தாக்குதல்களையும், மார்ச் 2007 இல் கட்டுநாயக்கா விமான தளத்திலும், திரும்ப ஏப்ரல் 2007 இல் இன்னும் ஒரு வான் தாக்குதலையும் நடத்தினாலும் அவர்களால் மேலதிக வான் தாக்குதல்கள் நடத்தக்கூடிய கட்டுமானங்கள் இருப்பதாக அரசாங்கம் கருதவில்லை.

இராணுவப் படைகள் வடபகுதியில் முன்னேறுவதை நிறுத்தி, கருணாவின் போராளிகளை முன்னிலைப்படுத்தி கிழக்குப் பகுதியை ஆக்கிரமிப்பு செய்து, ஜூலை 2007 இல் கிழக்கு மாகாணம் பயங்கரவாதிகளின் பிடியிலிருந்து முழுவதும் மீட்கப்பட்டது என அறிவித்தது. மட்டுமல்லாமல் தாங்கள் தங்களை அரசியல், இராணுவ, இராஜதந்திர ரீதியில பலப்படுத்தியமையால் வட மாகாணத்தையும் விடுவிக்கத் தயாராக இருக்கிறார்கள் எனவும், இரண்டு ஜனவரி 2008 போர் நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகி, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அவசியமற்றதால் அவர்களை விலகவும் கூறியது அரசு.

தான் ஒரு முடிவுக்கான சமரை நடத்தத் தீர்மானித்து விட்டார் என்பது மஹிந்தாவின் ஆவேசமாகவும் இருந்தது.

### வியூகங்களும் இடப்பெயர்வுகளும்

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக அறிவித்ததின் எதிரொலியாக இராணுவமும் விடுதலைப் புலிகளும் சிறிதளவான மோதலில் ஈடுபட, கொழும்பில் அதிகமாக நடத்தப்பட்ட தற்கொலை தாக்குதல்களாலும் சிறு சிறு சம்பவங்களாலும் இராணுவத்தின் முன்னேற்றம் தடுக்கப்பட்டது. பிரதேசங்களை ஆக்கிரமித்து முன்னேறுவதிலும் பார்க்க, இராணுவம் விடுதலைப் புலிகளின் நிலைகளுக்கு ஏவுகணைகள் மற்றும் வான் தாக்குதல்களை நடத்தி அவர்களுக்குத் தாக்குதல்கள் பல முனையில் வர கூடும் என்பதில் உஷாராக இருக்க வைக்க ஒரு தந்திரமாக இது பாவிக்கப்பட்டது.

இராணுவம் அப்படியான தாக்குதல்களை பரவலாக நடத்தியமையால் விடுதலைப் புலிக தங்களது நிலைகளில் கட்டுப்படுத்தி, அவர்கள் பரவி வியூகங்கள் ஏற்படுத்தி சுற்று வளைத்த தாக்குதல்கள் தருவதை தடுப்பதற்காக இது செய்யப்பட்டது என பின் நாட்களில் கருதப்பட்டது.

இந்த விதமான தாக்குதல்களை ஜனவரியில் இருந்து நடத்தி விடுதலைப் புலிகளை வன்னி பரப்பில் கிளிநொச்சிப் பகுதிகளில் மடக்கிக்கொண்டு, புலிகளின் தென்முனையில் பாரிய தாக்குதல்களை தொடங்கி, மடப்பகுதியைக் கைப்பற்றி, அங்கிருந்து வன்னியின் மேற்குப் பகுதி பூநகரியையும் ஆக்கிரமித்தன இலங்கை படைகள்.

தென் முனையில் மடு மே 2008 இல் விழுந்தது. பூநகரி நவம்பர் 2008இல் ஆக்கிரமிக்கப்பட இடைப்பட்ட மக்கள் மடுவிலிருந்து பாதுகாப்பும் வாழ்வாதாரமும் தேடி கிளிநொச்சிக்கு இடம்பெயர்ந்தனர்.

நவம்பர் மாதத்தில் விடுதலைப் புலிகளின் சமாதானப் பேச்சாளர் தமிழ்ச்செல்வன் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டு அவரது பணிகளும் நிலைகுலைகின்றன. இந்த முன்னேற்றப் போரில் விடுதலைப் புலிகளின் பாணி படைத் தரப்பால் பாவிக்கப்பட்டு, அவர்கள் போல ஆழ ஊடுருவி கிளைமோர் கண்ணி வெடித் தாக்குதல்களையும் சிறு காலாட்படை குழுக்களை பாவித்து பன்முகன் முகங்களில் இருந்து சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்பட்டமையால் விடுதலை புலிகள் பரவுவதற்கு சந்தர்ப்பங்கள் மட்டுப்படுத்தப்பட்டன. இப்படியான தாக்குதல்களுக்கு கருணாவின் போராளிகளே திட்டங்களை வகுத்து ஸ்ரீலங்கா இராணுவத்தின் முன்னணிக் காலாட்படைகளாகச் செயல்பட்டனர் எனக் கருதப்பட்டது. தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# நாட்டில் 96 லட்சம் பேர் பாரியவறுமையில் தவிப்பு
# 4 பேர் கொண்ட குடும்பச் செலவு 60 ஆயிரம் ரூபா!



## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

இலங்கையின் மொத்த சனத் தொகை 2 கோடியே 20 லட்சமாகும். அதில் 96 லட்சம் பேர் தற்போது வறுமையின் பிடியில் உள்ளனர் என புள்ளிவிவரங்களின் ஊடாகக் கணிப்பிட முழந்துள்ளது.

அவ்வாறான பின்னணியில், மரணிக்காமல் வாழ ஒரு நபருக்கு தேவைப்படும் தலா வீத சக்தி வள நுகர்வு (கிலோ கலோரி) 2030 ஆகும். அதனை பெற்றுக்கொள்ள மட்டும் கொழும்பில் 4 பேர் கொண்ட ஒரு குடும்பம் 60 ஆயிரம் ரூபாவை மாதம் செலவழிக்க வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில், அரசாங்கம் எந்தப் பகுப்பாய்வுகளும் இன்றி கோட்டா அரசாங்கம் செய்த அதே பிழையை மீண்டும் செய்து நடைமுறை சாத்தியமற்ற புதிய வரிகளை விதித்துள்ளது. இது பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். – என ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயங்களை அவர் புள்ளி விவரங்களுடன் ஒப்புவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

நாட்டில் நாம் நினைத்ததை விட வறுமை கோலோச்சி உள்ளது. 2019 ஆம் ஆண்டு, அதாவது கோட்டாபய ராஜபக்ஷவிடம் நாட்டை ஒப்படைக்கும் போது நாட்டின் வறுமை நிலை 3.2 வீதமாக இருந்தது. எனினும் புதிய சுட்டெண் பிரகாரம் 2022 ஓகஸ்ட் மாதம் இலங்கையின் வறுமை நிலை 14.3 வீதமாக அதிகரித்துள்ளது.

வறுமை என்பது, உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பான குடிநீர், கல்வி பெறும் வாய்ப்பு, பிற குடிமக்களிடம் மதிப்புப்பெறுதல் போன்றவை உட்பட்ட, வாழ்க்கைத் தரத்தைத் தீர்மானிப்பவற்றை இழுந்த நிலையாக நவீன சுட்டெண்களில் கணிக்கப்டுகின்றது. எனினும் இந்த 14.3 வீதம் எனும் இலங்கையின் வறுமை நிலையானது அவை எதனையும் கருத்தில் கொள்ளாத, வெறுமனே வருமானம் மற்றும் செலவை மட்டும் மையப்படுத்தி கணிக்கப்பட்டுள்ள நிலையாகும்.

அதன்படி, ஒரு மனிதன் மரணிக்காமல் உயிர் வாழ்வதற்கு தேவையான மிகக் குறைந்த அளவிளான சக்தி வள நுகர்வு (கிலோ கலோரி) அளவிடப்படுகின்றது. மக்கள் அதனை சோறு, மா உணவுப் பண்டங்கள், பழங்கள், பானங்கள், சிலர் சொக்லேட் வகைகள் உள்ளிட்ட பல உணவுகள் ஊடாக பெற்றுக்கொள்கின்றனர். அதன்படி ஒரு மனிதன் மரணிக்காமல் இருக்க குறைந்த பட்சம் 2030 கிலோ கலோரியை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்த தொகையைப் பெற கடந்த 2019 ஆம் ஆண்டு 4 பேர் கொண்ட ஒரு குடும்பம் மாதம் 27 ஆயிரத்து 864 ரூபாவை செலவழிக்க வேண்டி இருந்தது.

ஆனால் இன்று (2022 ஓகஸ்ட் மாத நிலைவரப்படி) அதே நான்கு பேர் கொண்ட குடும்பம் 53 ஆயிரத்து 840 ரூபாவை செலவழிக்க வேண்டி உள்ளது. கொழும்பில் இந் நிலைமை மேலும் மாற்றமான தாகும். கொழும்பில் ஒரு குடும்பம் 60 ஆயிரம் ரூபா வரை செலவு செய்ய வேண்டியுள்ளது.

இலங்கையின் சனதொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் தரவுகள் படி, உணவுப் பணவீக்கம் 133 வீதமாகும். இது ஒவ்வொரு நாளும் கூடிச் செல்லும். அப்படியானால் கொழும்பில் இன்று உயிர் வாழ்வதற்காக மட்டும் பெற்றுக்கொள்ளக் கூடிய மிகக் குறைந்த பட்ச கலோரி நுகர்வுக்காக செலவு செய்ய வேண்டிய தொகை 65 ஆயிரத்தைத் தாண்டி இருக்கும்.

இலங்கையின் சனத் தொகை 2 கோடியே 20 லட்சமாகும். அப்படியானால், 2019 ஆம் ஆண்டு இலங்கையின் வறுமை நிலை 3.2 வீதம் என்பது அப்போது 30 லட்சம் பேர் வறுமையின் கீழ் வாழ்ந்துள்ளனர். அந் நிலைமை தற் போது 14.3 வீதமாக அதிகரித்துள்ளமை மொத்த சனத் தொகையில் 96 லட்சம் பேர் வறுமையில் வாடுவதாக அர்த்த மாகும். இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 3 மடங்கு அதிகரிப்பாகும்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே நாம் இன்று வரி மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்கள் தொடர்பில் ஆராயவேண்டியுள்ளது. 2020 ஆம் ஆண்டு நாம் சர்வதேச நாணய நிதியத்தை நாடுமாறு கூறினோம். ஆனால் கேட்கவில்லை.

இப்போது நிலைமை மாற்றமானது. சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தப் பிரகாரம் வரி வருமாணத்தை அதிகரிக்க வேண்டும் என சிலர் கூறுகின்றனர்.

அதற்காக வேறு வழியின்றி வரிகளை அதிகரித்துள்ளதாகக் கூறுகின்றனர். ஒரு லட்சம் ரூபா வருமானம் பெறும் ஒருவரும் வருமான வரி செலுத்த வேண்டியுள்ளது.

நிலைமையை கொஞ்சம் சிந்திக்க வேண்டும். 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு மரணிக்காமல் இருக்கவே 60 ஆயிரம் ரூபா தேவைப்படும் நிலையில், கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வீட்டு வாடகை என அடிப்படை வசதிகளை கூட ஒரு லட்சம் ரூபாவால் நிறைவேற்ற முடியாது. அப்படி இருக்கையில் அவர்கள் வருமான வரி செலுத்த வேண்டும் என்பது நடைமுறைச் சாத்தியமா?

2019 இல் கோட்டாபய ராஜபக்ஷ வரி குறைப்பைச் செய்த போது, எந்த பகுப்பாய் வுகளையும் செய்யாது முன்னெடுத்தார்.

அதே தவறை இந்த அரசாங்கம் இப்போது வரி அதிகரிப்பை முன்னெடுக்கும் போது செய்கின்றது. மக்கள் தொடர்பில் ஆராயாமல், நடைமுறை சாத்தியமற்ற வகையில் வரி நடமுறைகளை, விகிதங்களை அரசாங்கம் மாற்றுகின்றது. இது அரசை மேலும் சிக்கலுக்குள்ளேயே தள்ளும்.

சர்வதேச நாணய நிதியம் வரி வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என நிபந்தனை விதித்திருப்பின், அந்த நிபந்தனையை நிறைவேற்ற சாதகமான வழிகள் உள்ளன. அதனைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

ஒழித்து மறைத்து இதனைச் செய்ய முடியாது. வெளிப்படைத் தன்மையோடு ஆராய்ந்து, பகுப்பாய்வு செய்து வரி வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

உதாரணமாக, வங்கிகளில் சேமிப்புக்கள் தொடர்பில் 5 வீத வரியே தற்போது அரவிடப்படுகின்றது. இதனை 10 வீதமாக அதிகரித்தால் மட்டும் 7ஆயிரத்து 500 கோடி ரூபா வருமானத்தை ஈட்டலாம்.

இது மத்திய வர்க்கத்தைப் பாதிக்காது. பெரும்பாலும் செல்வந்த வர்க்கத்துக்கே இந்த வரியை செலுத்த வேண்டி ஏற்படும். இது பாதிப்பற்ற நடமுறை. இவ்வாறான பல வழிகள் உள்ளன.

எம்முடன் கலந்து பேசுங்கள். மக்கள் மீது சுமையை சுமத்துவதை விடுத்து, வரி வருமானத்தை அதிகரிப்பதை மட்டும் ஆராயாது, செலவீனங்களைக் குறைப்பது தொடர்பாகவும் ஆராயுங்கள்.

96 லட்சம் பேர் வறுமை கோட்டின் கீழ் இருக்கும் நாட்டில் இத்தனை பெரிய அமைச்சரவை, இராஜாங் அமைச்சுக்கள் எதற்கு? அதனைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக எவ்வளவு செலவுகளைக் குறைக்கலாம். இவை தொடர்பாகவும் ஆராய வேண்டும். – என ஹர்ஷ டி சில்வா எம்.பி. குறிப்பிட்டார்.

# ராஜபக்ஷக்களின் அரசியல் பயணம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது

## நிசாம் காரியப்பர் தெரிவிப்பு



நாட்டின் முழு அதிகாரமும் தனி நபர் மீது குவிக்கப்பட்டு சர்வாதிகார ஆட்சியை மேற்கொண்டு வந்த தரப்பினரைக் கட்டுப்படுத்துவதற்கும் நாடாளுமன்றத்தின் ஜனநாயகம் மீண்டும் உறுதிசெய்யப்படவும் அரசமைப்பின் 22 ஆம் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் மூலம் சாத்தியமாகியுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் ராஜபக்ஷ இல்லாத அரசியல் உருவாகும். அல்லது ராஜபக்ஷ இல்லாத பொது ஜன பெரமுன அரசியலில் ஈடுபடும் என்று முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்

இது தொடர்பில் அவர் கூறுகையில் –

அரசமைப்பின் 22 திருத்தத்தை நிறைவேற்றக்கூடாது என்று பொது ஜனபெரமுனவின் மிக முக்கிய புள்ளிகள் தீர்மான முடிவில் இருந்தனர்.

எனினும் முன்னாள் அமைச்சர் பஸில்ராஜபக்ஷ வை எதிர்ப்பவர்கள் மற்றும் ராஜபக்ஷ அரசுக்கு எதிராக செயல் பட்டு குழுவினர் ஒன்றிணைந்து எவ்வாறாவது இரட்டை பிரஜாவுரிமை முறைமையை இல்லாது செய்து அவருடைய அரசியல் வரவிற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்கள்.

அன்று 20 இற்கு வாக்களித்த அமைச்சர் அலி சப்றி, இன்று 22 ஆவது திருத்தத்துக்கு வாக்களித்திருக்கிறார்.

மேலும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 22 திருத்தம் நாடா ளுமன்றத்தின் மூலம் ராஜபக்ஷக்களுக்கு இருக்கும் அதிகாரம் இல்லா தொழிக்கப்பட்டுள்ளது.

ராஜபக்ஷ அர சாங்கத்தின் அரசியல் பயணம் ஆட்டம் கண்டுவிட்டது. இதனை பலரும் பல தடவைகள் கூறியும் அதனை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர் களின் 'எக்வ நெகிடிமு' அரசியல் பயணமும் மக்கள் மத்தியில் சென் றவர்களுக்கு முகத்தில் அடித்தாற்போல அமைந்துள்ளது.

22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டமை நாடாளுமன்றத்தில் வீராப்புடன் இருந்தவர்களுக்கு அது தக்க பதலடி யாகும். மேலும் அவர்களை எதிர்த்து அவர்களுக்கு எதிராக பலரும் வாக்களித்துள்ளமை என்பது எதிர் காலத்தில் அவர்களுடைய இருப்பின் மீதான அரசியல் நம்பிக்கையை வலுவிழக்கச் செய்துள்ளது.

இன்று இவ்வாறு எதிராக செயல் பட்டவர்கள் நிச்சயம் எதிர்காலத்தில் அவர்களுக்கு எதிராக செயற்படுவார்கள். ஆகவே, என்னைப் பொறுத் தமட்டில் ராஜபக்ஷக்களின் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ராஜபக்ஷக்களின் அரசியல் பயணம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் பொது ஜன பெரமுன கட்சியின் அரசியல் பயணம் முடிவுக்கு வரப்படும் அல்லது எதிர்காலத் தில். ராஜபக்ஷ இல்லாத பொதுஜன பெரமுன அரசியல் கட்சி நாட்டில் காணப்படும்.

ராஜபக்ஷக்கள் மொட்டுக்கட்சியில் காலடி எடுத்த வைக்க முடியாத நிலை ஒன்று ஏற்படும். – என்றார்.

# தொழில் வாய்ப்புகளின்றி பல குடும்பங்கள் அவதி!



முல்லைத்தீவு துணுக்காய் பிரதேசத்துக்குட்பட்ட தேராங்கண்டல் கிராமத்தில் தொழில் வாய்ப்பின்றியும் வருமானம் இன்றியும் பெருமளவான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் அன்றாட உணவிற்கே பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி பொருள்களின் விலையேற்றம் என்பன தொழில் வாய்ப்பற்ற குடும்பங்களையும் பெண்களைத் தலைமைத்துவங்களாகக் கொண்ட குடும்பங்களை யும் பெரிதும் பாதித்துள்ளன.

குறிப்பாக அரிசி, சீனி, கோதுமை மா உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டாலும் குறைக்கப் பட்ட விலைகளில் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாது இருப்பதாகவும் தெரிவித்துள்ள அந்தப் பகுதி மக்கள் அன்றாடம் ஒரு நேர உணவைக் கூட உண்ணக்கூடிய நிலையில் தாங்கள் இல்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக வாழ்வாதாரத்துக்காக எந்த ஒரு பயிர் செய்கைகளை கூட மேற்கொள்ள முடியாத நிலையில் எரிபொருள்களின் விலையேற்றம், காரணமாக பெரிதும் பாதித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## ரிஷி சுனக் போட்டியின்றி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வம்சாவளியைச் சேர்ந்த ஒருவர் முதல் முறையாக பிரதமர் ஆகிறார்.

ரிஷி சுனக் பிரிட்டனின் 57 ஆவது பிரதமராக பதவியேற்க உள்ளார். 42 வயது நிரம்பிய ரிஷி சுனக், நாட்டின் இளம் வயது பிரதமர் என்ற பெருமை யையும் பெற்றுள்ளார்.

பிரிட்டனில் பொருளாதார நெருக்கடி, எரிபொருள் விலையை உயர்த்த திட்டம், மினி - பட்ஜெட் சர்ச்சை போன்ற கார ணங்களால் பிரதமர் லிஸ் டிரஸ் கடந்த 20 ஆம் திகதி தனது பதவியை ராஜினா மாச் செய்தார்.

இதையடுத்து ஆளும் கொன்சர்வேட டிவ் கட்சியின் புதிய தலைவர் மற்றும் நாட்டின் புதிய பிரதமரை தேர்ந்தெடுக்கும் நடைமுறைகள் தொடங்கின.

பிரதமர் பதவிக்கான போட்டியில் முன்னாள் பிரதமர் போரிஸ் ஜான்சன், இந்திய வம்சாவளி எம்.பி. ரிஷி சுனக் மற் றும் பென்னி மோர்டன்ட் ஆகியோர் கள மிறங்குவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. பிரதமர் பதவிக்கான போட்டியில் கள மிறங்குகிறார் என ரிஷி சுனக் நேற்று அதி காரப்பூர்வமாக அறிவித்தார். ரிஷி சுனக்கிற்கு கொன்சர்வேட்டிவ் கட்சியில் 140க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் அப்போது ஆதரவு அளித்தனர். இதேபோன்று போரிஸ் ஜான்சனும் போட்டியிடுவது குறித்து முறைப்படி அறிவிப்பார் என என எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், பிரத மர் பதவிக்கு போட்டியிடப்போவதில்லை என்று போரிஸ் ஜான்சன் நேற்றுத் திடீ ரென அறிவித்தார். அதன்பின்னர், போது மான எம்.பி.க்கள் ஆதரவு இல்லாத நிலை யில், பென்னி மோர்டன்டும் போட்டியில் இருந்து விலககிறார் என அறிவித்தார். அவர் ரிஷி சுனக்கிற்கு ஆதரவு தெரிவிக் கிறார் எனக் கூறியிருந்தார். இதையடுத்து ரிஷி சுனக் போட்டியின்றி தேர்ந்தெடுக் கப்பட்டார்.

## தண்டவாளத்தில் சரிந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார்.

ஹட்டன் மற்றும் கொட்டகலை ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் ஹட்டன் ரயில் நிலையத்திற்கு அருகாமை யிலேயே இந்த குப்பைகள் அடங்கிய மண் மேடு சரிந்து வீழ்ந்தது. அதன் காரணமாக நானு ஓயிலிருந்து ஹட்டன் நோக்கி பயணித்த சரக்கு ரயில் மண் மே ட்டில் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

ரயில் பாதையில் இடிந்து விழுந்த குப்பை மேட்டை ரயில்வேப் பராமரிப்பு பணியாளர்கள் அகற்றியதன் பின்னர், நேற்றுக் காலை 08.30 மணியளவில் மலையக ரயில் சேவை மீண்டும் வழமை க்குத் திரும்பியது.

## டிராக்டர் தடம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வம்மியடியூற்று திக்கோடை பிர தேசத்தைச்சேர்ந்த சண்முகம் வினோராஜ் (வயது 31) என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

தனது தாயாரின் வீடான பண்டாரிய வெளி பிரதேசத்தில் இருந்து தனது மனை வியின் வீட்டுக்கு தனது டிராக்டரில் பய ணித்துக்கொண்டிருக்கும் போது டிராக்டர் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் படுகாயம் அடைந்த நிலையில் மகிழடித் தீவு வைத்தியசாலையில் அவர் சேர்க்கப் பட்டார். இருந்தபோதும் சிகிச்சை பல னின்றிவர் உயிரிழந்தார். இவர் கடந்த மாதம் திருமணமானவர் எனவும் கூறப் பட்டது.

மட்டக்களப்பு நீதிமன்ற பதில் நீதிவான் ரி.தியாகேஸ்வரனின் உத்தரவிற்கமைய சம்ப இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப் பிள்ளை தவக்குமார் சடலத்தைப் பார்வை யிட்டார். பிரேத பரிசோதனையின் பின்னர் நெருங்கிய உறவினர்களிடம் சடலத்தை ஒப்படைக்கும்படி பொலிஸாருக்கு உத்த ரவிட்டார். சம்பவம் பற்றிய மேலதிக விசார ணைகளை கொக்கட்டிச்சோலைப் பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர்.










காலைக்கதிர்
Kalaikkathir

# மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதிக்கு மாத்திரமே நிறைவேற்று அதிகாரம் உள்ளது!

## இடித்துரைக்கிறார் அநுரகுமார திஸநாயக்க



ரணில் விக்ரமசிங்க மக்களால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவில்லை. அவர் தற்காலிகமாக பதவியில் நிறுத்தப்பட்ட ஒருவர். ஆனால் அரசமைப்பின் 40 ஆவது சரத்தில் உள்ள இடைவெளியை பயன்படுத்தி ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் தற்போது தனக்கு நிறைவேற்று அதிகாரம் உள்ளதாக எண்ணிக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் நாட்டின் அரசமைப்பின் படி நாட்டின் பாதுகாப்பு, நிறைவேற்று அதிகாரமும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாலேயே செயற்படுத்த வேண்டும் என்றும் ரணில் விக்ரமசிங்கவிற்கு எதுவித அதிகாரங்களும் இல்லை என்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மொரவக்க பிரதேசத்தில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

எமது நாட்டின் அரசமைப்பின் 4 ஆம் சரத்தின் ஆ பிரிவின் படி மக்கள ஆணையின்றி அதனை மாற்ற முடியாது. நாட்டின் பாதுகாப்பு, நிறைவேற்று அதிகாரமும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதி பதியாலேயே செயற்படுத்த வேண்டும்.

எந்த ஜனாதிபதி? மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாகும். ஆனால் ரணில் விக்கிரமசிங்க மக்களால் தெரிவு செய்யப்பட்டாரா? அவர் நாடாளுமன்றத்துக்குக் கூட தெரிவு செய்யப்படவில்லை. தற்காலிகமாக பதவியில் நிறுத்தப்பட்ட ஒருவர்.ஆனால்40சரத்தில் உள்ள இடை வெளியை பயன்படுத்தி ஜனாதிபதியாகவந்ததன்பின்னர்தற்போது தனக்குநிறைவேற்றுஅதிகாரம்உள்ளதாக எண் ணிக் கொண்டுள்ளார்.

மேலும் 134 பேரும் முழுமையான திருடர்கள். 134 பேர் வாக்களித்தனர். ஜனாதிபதி இல்லாத நிலையில் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஜனாதிபதி 6 மாதங்களுக்கு மேல் பதவியில் நீடிக்க முடியாது என்று நாம் திருத்தங்களை மேற்கொண்டோம்.

நல்லது அது மக்களுக்கு நல்லதாக அமைந்தாலும் அது நாடாளுமன்றத்தில் உள்ளவர்களுக்கு சிறந்தது அல்ல. அவர்கள் கட்சி மாறி அங்குமிங்கும் தாவினால் நாடாளுமன்றத்தில் அவரின் உறுப்புரிமை இல்லாது செய்யப்படும் என்று திருத்தம் மேற்கொண்டோம். அது சிறந்ததா? இல் லையா? நீங்கள் ஏற்று கொண்டு கைக ளைத் தட்டிப் பயனில்லை அதனை நாடா ளுமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அதனை நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை.

மேலும் ரணில் விக்கிரமசிங்க நாடு கடும் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டு இருந்த போது எவரும் பொறுப்புகளைப் பொறுப்பேற்க முடியாது என்ற போதே தாம் தைரியமாக பதவியை பொறுப்பேற்றார் எனக் கூறுகிறார். கடந்த மே மாதம் 11ஆம் திகதி நாம் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தோம். அந்தக் கடிதத்தில் உங்களால் முடியாது என்றால் நாம் பதவிகளைப் பொறுப்பேற்கத் தயார் என்று கூறியிருந்தோம்.

இருப்பினும் 13 ஆம் திகதி ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவிக்குத் தெரிவு செய்து ராஜபக்ஷாக்களைப் பாதுகாக்கும் கேடயமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

மக்கள் எழுச்சி போராட்டத்தின் போது அலரி மாளிகையில் இருந்து தப்பிச் சென்று திருகோணமலையில் பதுங்கியிருந்து மஹிந்த ராஜபக்ஷ இன்று களுத்துறையில் மீண்டும் 'எக்வ நெகிடிமு' என்கிறார்.

இந்நிலையில் அடுத்த மக்கள் எழுச்சி போராட்டங்கள் வன்முறைகள் மூலம் உருவாவதை விடுத்து மக்களால் கட்டியெழுப்பக்கூடிய அரசாங்கம் உருவாகும் வரை இவ்வாறான பயணங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். – என்றார்.

NFlash Super Detergent

வேலை வாய்ப்புக்கள்

வடக்கில் முன்னோடிகளாகத் திகழும் NFlash குழுமத்தின் கீழ்க் காணும் வேலை வாய்ப்புக்கள்

கணணி உத்தியோகத்தர் - உயர்தரத் தகைமை, சாதாரண டிப்ளோமா
காட்சியறை முகாமையாளர் - யாழ்ப்பாணம், சங்கானை
சந்தைப்படுத்தல் மேற்பார்வையாளர் - வடக்கு மாகாணம்
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் - வடக்கு மாகாணம்
விநியோக உதவியாளர் - வயதெல்லை (18-35)
பொதி செய்பவர் - பெண்கள்.
சாரதி - Light Vehicle licence
விற்பனை - விற்பனை ஊக்குவிப்பாளர்கள் (பெண்கள்)
மேற்பார்வையாளர் (முன்பள்ளி) - ஓய்வு பெற்ற உயர் நிலை ஆசிரியை
பகுதி நேர ஆசிரியை - ஆங்கிலம், சிங்களம்
பகுதி நேர வாகன சாரதி - ஆண்
துப்பரவுப்பணியாளர் - பெண்
உதவியாளர்- வாகன உதவியாளர் (பெண்),
ஆசிரியர்- தகுதிவாய்ந்த முன்பள்ளி ஆசிரியை

வெதுப்பக (வெதுப்பி) Bakery Bass ஆட்கள்தேவை
பலகார சமையல்காறர் - முறுக்கு, மிக்சர் ரோல், வடை போன்ற நொறுக்குத் தீனிகள் தயாரிப்பவர்கள் ஆண், பெண்)
பொதி செய்பவர் - பெண்கள்
மருத்துவர்கள் - சுதேச மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியா-ளர்கள்
தையல்கலைஞர் - பெண்
சாரதி - விற்பனையுடன் வாகனம் செலுத்துபவர்

EPF, ETF உடன் கவர்ச்சிகரமான சம்பளத்துடன் ஊக்கத்தொகை, தகுதி வாய்ந்தவர்கள் கீழ்காணும் முகவரிக்கு சுய விபரக் கோவையை அனுப்பவும் அல்லது எமது வட்ஸ் அப் இலக்கத்திற்கு குறுந்தகவல் (Message) அனுப்பவும்.

வட்ஸ் அப் - 0779635551
முகவரி - 186/11 NFlash Super detergent
நெசவுசாலை வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்
607A, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

# பஸிலின் அதிகாரம் பறிக்கப்பட்டுவிட்டது!

## ஜே.சி.அலவத்துவல பெருமிதம்



பஸில் ராஜபக்ஷவால் நாடாளுமன்றத்தில் எதனையும் செய்ய முடியாது என்பது இறுதியாக இடம்பெற்ற வாக்கெடுப்பு எடுத்துக்காட்டியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி. அலவத்துவல தெரிவித்தார்.

பஸில் ராஜபக்ஷவின் வார்த்தைகளுக்கு மாறாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர் எனவும் இதன் மூலம் அவருக்கு அதிகாரம் இல்லாதமை புலப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நாட்டில் இன்று மக்கள் வாழ முடியாத மிக மோசமான நிலைமை உருவாகி உள்ளதாகவும், பிள்ளைகளுக்கு உணவளிப்பதற்காக அடைமானம் வைப்பதற்கு எதுவுமில்லாமல் மக்கள் தவிக்கின்றனர் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், பாடசாலை மாணவர்களில் சுமார் முப்பது வீதமானவர்கள் உணவின்றி பாடசாலைக்கு வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கணவன் - மனைவிக்கு இடையில் கத்தி வெட்டு!

## இருவரும் வைத்தியசாலையில் சேர்ப்பு

யாழ். கொடிகாமம் தவசிக்குளம் பகுதியில் கணவன், மனைவி ஒருவருக்கொருவர் கத்தியால் வெட்டிக்கொண்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குடும்ப பிரச்சினை வாய் தர்க்கமாக மாறியதில் கணவன் மனைவியை வெட்டியுள்ளார்.

அதே கத்தியைப் பறித்த மனைவி கணவனை வெட்டியுள்ளார். இருவரும் வெட்டு காயங்களுக்குள்ளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணையினை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.10.2022இல் வெளியிடப்பெற்றது.